# Manikkavachagar's Devotion and the History of Tirupperunthurai (Avudaiyar) Temple

**G. Mahalakshmi**
*Ph.d Part Time Research Scholar*
*Department of Tamil, Kandaswami Kandar's College*
*Paramathi Velur, Namakkal (D.t)*

**Dr.A.Vimala**
*Assistant Professor*
*Department of Tamil, Kandaswami Kandar's College*
*Paramathi Velur, Namakkal (D.t)*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜனவரி

வருடம்: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

DOI:
https://doi.org/10.5281/zenodo.18358738

**Abstract**

*Manikkavacakar occupies a unique position in the history of Saiva tradition as an exceptional devotional poet. The core of his life lies in the extraordinary transformation of a man who once held high political office into a devotee who completely surrendered himself to Lord Śiva through divine grace. The sacred site where this transformation occurred is Tirupperunturai, now known as the Avudaiyār Temple, which played a foundational role in both Manikkavacakar's life and the composition of the Tiruvācakam.Manikkavacakar, who served as a minister under the Pandya king of Madurai, was sent to procure horses for the royal cavalry. During this mission, he encountered Lord Śiva at Tirupperunturai, who appeared in the form of a guru. This profound spiritual experience destroyed his ego and led him to renounce political life and surrender fully at the feet of the Lord. His expression in the Tiruvācakam, "He melted my iron-like heart," is a direct poetic articulation of this inner transformation.The history of the Avudaiyār Temple at Tirupperunturai centers on the episode in which Lord Śiva, appearing as a Brahmin (Vedic priest), bestowed grace upon Manikkavacakar and claimed him as His own. The use of the entire sum intended for purchasing horses to build the temple, followed by Śiva's divine play of transforming the horses into foxes, is a well-known episode in Saiva tradition. These historical narratives are recorded in texts such as Manikkavācakar Vilāsam, local temple legends (talapurāṇas), and the works of later poets.Architecturally and ritually, the Avudaiyār Temple is unique in that it departs from conventional Āgamic norms. Instead of a Śiva-liṅga, the sanctum enshrines only the Avudai (yoni) as the primary symbol of worship. This distinctive form represents a Saiva philosophy that transcends image-based worship and emphasizes divine grace and inner spiritual experience. Manikkavacakar's devotional outlook echoes this very principle, asserting that true worship lies not in ritual alone but in the melting of the heart through loving devotion.Key themes found in the Tiruvācakam—such as the grace of the guru, the dissolution of ego, and liberation from the cycle of birth and death—are literary manifestations of Manikkavacakar's experience at Tirupperunturai. Consequently, Tirupperunturai is not merely a historical sacred site but may be regarded as the spiritual source of the Tiruvācakam itself. In conclusion, Manikkavacakar's devotion and the history of the Avudaiyār Temple at Tirupperunturai are inseparably intertwined. His personal spiritual experience evolved into temple history, while that very history became the spiritual substance of the Tiruvācakam, thereby representing the highest expression of the Saiva bhakti tradition.*

***Keywords:*** *Manikkavacakar – Tiruvācakam - Saiva Bhakti Tradition – Tirupperunturai - Avudaiyār Temple - Lord Śiva*

**Bibliography**

1. "Tirupperunthurai, also known as Avudaiyar Koil." Archived copy, published on 20 August 2018. Retrieved on 28 November 2018.
2. "Archived Copy." Archived on 20 February 2014. Retrieved on 9 January 2013.
3. Website source: http://pranavamayi.nic.in/avudaiyar-temple.htm
4. "Archived Copy." Archived on 21 August 2012. Retrieved on 9 January 2013.
5. Website source: http://pranavamayi.nic.in/shiva-temples.htm
6. V. Jayapal, Shaiva Sacred Temples Sung by the Four Shaiva Saints and Thiruvasagam Shrines, Saiva Siddhanta Research Centre, 28, Ammaiappa Illam, Srinivasapuram Extension, Thanjavur – 613 009, December 2014, p. 10.
7. Tirupperunthurai (Reference to the sacred Shaiva temple / place).
8. Website source: https://niyaman.com/temples_ancient_history_1255627.htm
9. Website source: http://www.valampuri.com/display/4180/4180ari.html
10. Explanation of Thiruvasagam, Author: R. P. Sethupillai, International Institute of Tamil Studies, 2008.
11. Book Title: Manikkavachagar Vilasam Genre: Shaiva Purana / Vilasa Literature (Describes the life history and divine greatness of Manikkavachagar)
12. Chronological Compilation of Bharathiyar's Works (23 Volumes), National Publishers, India, 2024 Edition.
13. Thiruvilaiyadal Puranam of Thiruvaalavaayudaiyar, (Tirupperunthurai Adheenam Hymn Collection), Mayilam Adheenam Publications.

# மாணிக்கவாசகரின் பக்தியும் திருப்பெருந்துறை ஆவுடையார் கோயில் வரலாறும்

***கா. மகாலட்சுமி***
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, கந்தசாமிக் கண்டர் கல்லூரி
பரமத்தி வேலூர், நாமக்கல் (மா. வ)

***முனைவர் அ. விமலா***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
கந்தசாமிக் கண்டர் கல்லூரி, பரமத்தி வேலூர்
நாமக்கல் (மா. வ)

***ஆய்வுச் சுருக்கம்***
*மாணிக்கவாசகர் சைவ சமய வரலாற்றில் தனித்துவமான பக்திக் கவிஞராக விளங்குகிறார். அரசியற் பொறுப்பில் இருந்த ஒரு மனிதன், சிவபெருமானின் அருளால் தன்னை முழுமையாக அர்ப்பணித்த பக்தனாக மாறிய அதிசய மாற்றமே அவரது வாழ்க்கையின் மையம். இந்த மாற்றம் நிகழ்ந்த முக்கியத் தலம் திருப்பெருந்துறை ஆகும்; இன்றைய ஆவுடையார் கோயில் என அழைக்கப்படும் இத்தலம், மாணிக்கவாசகர் வாழ்விலும் திருவாசக உருவாக்கத்திலும் அடிப்படைப் பங்கு வகிக்கிறது. மதுரை பாண்டிய மன்னனின் அமைச்சராக இருந்த மாணிக்கவாசகர், குதிரை வாங்கும் பொருட்டு அனுப்பப்பட்டபோது, திருப்பெருந்துறையில் சிவபெருமானை குருவாக சந்தித்தார். அங்கே நிகழ்ந்த ஆன்மீக அனுபவமே அவரது அகந்தையை அழித்து, அரச வாழ்வை விட்டு இறைவன் திருவடிகளில் சரணடையச் செய்தது. இரும்பு தரு மனம் உருக்கி என அவர் திருவாசகத்தில் சொல்வது, இந்த உள்மாற்றத்தின் நேரடி வெளிப்பாடாகும். திருப்பெருந்துறை ஆவுடையார் கோயில் வரலாறு, சிவபெருமான் மறையோனாக (வேதியராக) வந்து மாணிக்கவாசகரை ஆட்கொண்ட நிகழ்வை மையமாகக் கொண்டது. குதிரை வாங்க வந்த பொருள் முழுவதும் கோயில் கட்டுதலுக்காக செலவழிக்கப்பட்டதும், பின்னர் சிவபெருமான் குதிரைகளை நரிகளாக மாற்றிய திருவிளையாடலும், சைவ மரபில் பரவலாக அறியப்பட்டவை. இந்த வரலாற்றுச் செய்திகள் மாணிக்கவாசகர் விலாசம், தலபுராணங்கள், மற்றும் பிற்காலக் கவிஞர்களின் பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆவுடையார் கோயில், ஆகம மரபுக்கு மாறுபட்ட அமைப்புடன், லிங்க உருவமின்றி ஆவுடை (யோனி) மட்டுமே பிரதானமாக விளங்கும் தனித்துவம் கொண்டது. இது, உருவ வழிபாட்டைத் தாண்டிய அருள்-அனுபவ சைவ தத்துவத்தை குறிக்கும்ச்மாகக் கருதப்படுகிறது. மாணிக்கவாசகரின் பக்தியும் இதே தத்துவத்தையே வலியுறுத்துகிறது-சடங்கு அல்ல, அக உருகும் அன்பே மெய் வழிபாடு. திருவாசகத்தில் காணப்படும் குருவருள், அகந்தை ஒழிவு, பிறப்பு-இறப்பு விடுதலை போன்ற கருத்துகள், திருப்பெருந்துறை அனுபவத்தின் இலக்கிய வடிவங்களாக அமைந்துள்ளன. இதனால், திருப்பெருந்துறை வெறும் வரலாற்றுத் தலம் அல்ல் திருவாசகத்தின் ஆன்மீக ஆதாரம் எனக் கருதப்படுகிறது. மாணிக்கவாசகரின் பக்தியும் திருப்பெருந்துறை ஆவுடையார் கோயில் வரலாறும் ஒன்றோடொன்று பிரிக்க முடியாத வகையில் பின்னிப்பிணைந்துள்ளன. அவரது வாழ்க்கை அனுபவம், கோயில் வரலாறாகவும்; கோயில் வரலாறு, திருவாசகத்தின் ஆன்மீக உள்ளடக்கமாகவும் மாறியுள்ளமை, சைவ பக்தி மரபின் உச்சத்தை வெளிப்படுத்துகிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *மாணிக்கவாசகர், திருவாசகம், சைவ பக்தி மரபு, திருப்பெருந்துறை, ஆவுடையார் கோயில், சிவன்.*

### முன்னுரை

தமிழ்ச் சைவ இலக்கிய மரபில் பக்தி இயக்கம் சிறப்பிடம் பெற்றுள்ளது. அந்த இயக்கத்தின் உச்சமாக விளங்குவது திருவாசகம். திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார் என்ற பழமொழி, அதன் ஆழ்ந்த ஆன்மிகத் தாக்கத்தை வெளிப்படுத்துகிறது. திருவாசகத்தை அருளிய மாணிக்கவாசகர், தமது வாழ்க்கை அனுபவங்களையும் இறையனுபவத்தையும் திருத்தலங்கள் வழியாக வெளிப்படுத்தியுள்ளார். அந்தத் திருத்தலங்களின் வரலாற்றுப் பின்புலமும் சமயப் பண்பாடும் இந்த ஆய்வின் மையமாக அமைகின்றன.

### மாணிக்கவாசகர்

மாணிக்கவாசகர் சைவ சமயக் குரவர்கள் நால்வரில் ஒருவராவர். முன்னைய மூவரும் தேவாரம் பாடியிருக்க இவர் திருவாசகமும் திருக்கோவையாரும் ஆகும். இவர் பொ.ஊ. ஒன்பதாம் நூற்றாண்டின் வரகுண பாண்டியன் காலத்தைச் சேர்ந்தவர். அரிமர்த்தன பாண்டியனிடம் தலைமையச்சராய் பணியாற்றினார்.

மாணிக்கவாசகர் பாடிய பக்திச் சுவையும் மனதை உருக்கும் தன்மையும் கொண்ட திருவாசகப் பாடல்கள், தமிழில் சிறந்த இலக்கியங்களின் வரிசையில் வைத்து எண்ணப்படுகின்றது. “சிறை பெறா நீர் போல் சிந்தை வாய்ப் பாயும் திருப்பெருந்துறையுறை சிவனே” (பா.392) என்பதாலும், “இமைப் பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க.” எனும் அடிகளால் தமிழின் அருட் திறத்தையும் வாதவூரரிற்கும் இறைவனுக்குமான நெருக்கத்தையும் உணரலாம். “நரியைக் குதிரைசெய்” எனும் திருநாவுக்கரசர் பாடல் மூலம் இவர் காலத்தால் அப்பருக்கு முந்தியவர் எனக் கருதப்படுகிறது. ஞான நெறியைப் பின்பற்றிய இவர் 32 ஆண்டுகளே வாழ்ந்து ஆனி மகத்தில் சிதம்பரத்தில் முக்தியடைந்தார் (சிவனடி சேர்ந்தார்).

இவருக்கு அருள்வாசகர், மாணிக்கவாசகர், திருவாதவூரடிகள், மணிமொழியார், தென்னவன் பிரமராயன் என்ற பெயர்களும் உண்டு. மாணிக்கவாசகர் பாண்டிய நாட்டில் அமைச்சர் பதவி வகித்தவர். அரச பணியில் ஈடுபட்டிருந்த போது, திருப்பெருந்துறையில் சிவபெருமானின் அருளைப் பெற்று, உலகியல்பற்றைத் துறந்து முழுமையான பக்தி வாழ்க்கையை மேற்கொண்டார். அவரது வாழ்க்கை, அரசியலிலிருந்து ஆன்மிகத்துக்கான பயணமாக அமைந்துள்ளது.

### மாணிக்கவாசகர் பக்தி

மாணிக்கவாசகர் பக்தி, பயம் அல்லது சடங்கு மையமல்ல அது அன்பும் உருக்கமும் நிறைந்தது. சிவனை தந்தை, தாய், தோழன், தலைவன் என பல உறவுகளின் வழியாக அனுபவிக்கும் தன்மை அவரது பாடல்களில் காணப்படுகிறது. தன்னைத் தாழ்த்தி, இறைவனை உயர்த்தும் அடக்கமும் பணிவும் அவரது பக்தியின் அடையாளமாகும்.

### திருவாசகம் - பெயர் ஆய்வு

திரு என்பது புனிதத்தையும், வாசகம் என்பது சொல்லையும் குறிக்கும். இறையருளால் பிறந்த புனிதச் சொற்களே திருவாசகம். இது வெறும் இலக்கிய நூல் அல்ல் ஆன்மிக அனுபவத்தின் மொழிப்பெயர்ப்பு ஆகும். அதனால் தான் இது சைவ சமயத்தில் உயர்ந்த இடம் பெற்றுள்ளது.

### திருவாசகத்துள் இடம் பெற்றுள்ள தலங்கள்

1. திருப்பெருந்துறை
2. தில்லை
3. உத்தரகோசமங்கை
4. திருவண்ணாமலை
5. திருக்கழுகுன்றம்
6. திருத்தோணிபுரம்
7. திருவாரூர் ஆகியவை திருமுறைத்தலங்களாகவும் இவை திருவிசைப்பா திருப்பல்லாண்டு தலங்களாகவும் இடம் பெற்றுள்ளன.

### திருவாசகத்தில் குறிக்கப்பெறும் தலங்கள்

1. மகேந்திரமலை 2. பஞ்சப்பள்ளி 3. நந்தம்பாடி 4. குடநாடு 5. வேலம்புத்தூர் 6. சாந்தம்புத்தூர் 7. மதுரை 8. திருப்பூவணம் 9.

திருவாதவூர் 10. பூவலம் 11. திருவெண்காடு 12. பட்டமங்கலம் 13. ஓரியுர் 14. பாண்டூர் 15. தேவூர் 16. திருவிடைமருதூர் 17. கச்சி ஏகம்பம் 18. ஸ்ரீ வாஞ்சியம் 19. கடம்பூர் 20. ஈங்கோய்மலை 21. திருவையாறு 22. திருப்பூந்துருத்தி 23. திருப்பனையூர் 24. திருப்புறம்பயம் 25. சந்திரதீபம் 26. குற்றாலம் 27. பாலை 28. கல்லாடம் 29. மொக்கணிச்சுரம் 30. கூடல் (மதுரை) 31. திருப்பராய்துறை 32. திருச்சி ராப்பள்ளி 33. கோகழி 34 திருப்பழனம் 35. இத்தி 36. மலைநாடு 37. அவிநாசி. இவற்றுள் சில திருமுறைத்தலங்கள். ஏனையவற்றுள் பல பெயர்கள் எவ்வெத்தலங்களைக் குறிக்கின்றன என்பதைச் சரியாக அறியமுடியவில்லை. திருவாதவூர் மாணிக்கவாசகருடைய அவதாரத்தலம்.

### தலங்களும் அருளிச் செய்யப் பெற்ற பதிகங்களும் பகுதிகளும்

1. திருப்பெருந்துறை
2. தில்லை
3. உத்தரகோசமங்கை
4. திருவண்ணாமலை
5. திருக்கழுக்குன்றம்
6. திருத்தோணிபுரம்
7. திருவாரூர்

### திருப்பெருந்துறை - ஆவுடையார் கோயில்

- இறைவன் - ஆம்நாதசுவாமி, குருசுவாமி, பரமசுவாமி, ஆத்மநாதர்.
- இறைவி - யோகாம்பாள்.
- தலமரம் - குருந்த மரம்.
- தீர்த்தம் - அக்கினித் தீர்த்தம் (திருத்தமரம் பொய்கை)

### அமைவிடம்

திருவாசகத் தலம். புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கிக்குப் பக்கத்தில் உள்ளது. அறந்தாங்கி - மீமிசல் பாதையில், அறந்தாங்கியிலிருந்து 14 கி.மீ தொலைவில் உள்ளது. திருச்சியிலிருந்து புதுக்கோட்டை அறந்தாங்கி வழியாகவும், தஞ்சையிலிருந்து பட்டுக்கோட்டை அறந்தாங்கி வழியாகவும், மதுரையிலிருந்து திருப்பத்தூர் காரைக்குடி அறந்தாங்கி வழியாகவும் இத்தலத் திற்கு வரலாம். மக்கள் வழக்கில் இன்று இத்தலம் ஆவுடையார்கோயில் என்று வழங்குகிறது. ஊர் - பெருந்துறை. கோயில் - ஆவுடையார் கோயில். கோயிற் பெயரான ஆவுடையார் கோயில் என்பதே ஊருக்குப் பெயராக வழங்ககிறது. சிறிய ஊர். அருகில் செல்லும் போதே கோபுரம் காட்சியளிக்கிறது.

### வெள்ளாறு

உலகவுயிர்கள் வீடுபேறு பெறுவதற்குச் சாதனமாகப் பிறவிக் கடலிலிருந்து கரையேறுவதற்குத் துணையாகவும் பெரும் துறையாக விளங்கும் தளம் ஆதலின் பெருந்துறை எனப் பெயர் பெற்றது. வெள்ளாறு பாய்கின்ற வயற்பரப்புக்கள் நிறைந்த பகுதி. “தெள்ளுநீர் வெள்ளாறுபாய், திருமிழலை நாட்டுப் பெருந்துறை” என்பது சிவலோக நாயகி பொன்னூசலில் வருந்தொடர்.

### இத்தலத்தில் பாடப்பெற்றவை

திருவாசகத்திலுள்ள 51 பகுதிகளில் 20 பகுதிகள் (சிவபுராணம்), திருச்சதகம், திருப்பள்ளியெழுச்சி, செத்திலாப்பத்து, அடைக்கலப் பத்து, ஆசைப்பத்து, அதிசயப்பத்து, புணர்ச்சிப்பத்து, வாழாப்பத்து, திருவார்த்தை, திருவெண்பா, பண்டாய நான்மறை) இத்தலத்தில் பாடப்பெற்றவை.

### இத்தலத்திற்குரிய வேறு பெயர்கள்

அனாதிமூர்த்தத்தலம், ஆதிகயிலாயம், உபதேசத்தலம், குருந்தவனம், சதுர்வேதபுரம், சதுர்வேதமங்கலம், ஞானபுரம், சிவபுரம், திருமூர்த்திபுரம், தட்சிண கயிலாயம், யோகவனம் முதலியன.

### ஆத்மநாதருக்குரிய பெயர்கள்

ஆத்மநாதருக்குரிய பெயர்களாக பதினெட்டு பெயர்கள் உள்ளன. 1) ஆத்மநாதர் 2) பரம சுவாமி 3) திருமூர்த்திதேசிகர் 4) சதுர்வேதபுரீசர் 5) சிவயோகவனத்தீசர் 6) குந்தகவனேசர்

*7) சிவக்ஷேத்ரநாதர் 8) சன்னவனேசர் 9) சன்னவநாதர் 10) மாயபுரநாயகர் 11) விப்பிரதேசிகர் 12) சப்தநாதர் 13) பிரகத்தீசர் 14) திருதசதேசிகர் 15) அசுவநாதர் 16) சிவ புரநாயகர் 17) மகாதேவர் 18) திரிலோககுரு என்பன.*

**அமைப்பு**

சிவாலயங்கள் பெரும்பாலும் கிழக்கு நோக்கியிருக்கும். சில மேற்கு நோக்கியிருக்கும். ஆனால் குருமூர்த்தமாக அமைந்த இத்திருக்கோயில் தெற்கு நோக்கியுள்ளது. தவிர, சிவாலயங்களில் இறைவன், சிவலிங்கபாண வடிவில் அருவுருவாகக் காட்சிதர, இக்கோயிலில் மட்டும் குருந்தம் மேவிய குருபரனான ஆத்மநாதர் அருவமாக இருந்து சித்தத்தைச் சிவமாக்கும் சித்தினைச் செய்தருளுகின்றார். ஆறாதாரங்களை நினைவூட்டும் வகையில் கனகசபை முதலான ஆறு சபைகளும் இக்கோயிலில் உள்ளன. திருப்பரங்குன்றத் திருப்புகழில் “அருக்கு மங்கையர்” என்று தொடங்கும் பாடலில் “:வழியடியார் திருக்குருந்தடி அருள் பெற அருளிய குருநாதர்” என்று ஆத்மநாதசுவாமி போற்றப்படுகிறார். ஆத்மலிங்க வடிவில் இறைவன் இப்பெருந்துறையில் எழுந்தருளியுள்ள சிறப்பை - அருவ நிலையை - ஆத்மசொரூபமாக உள்ள நிலையை

**“பார்த்து நாம் குருவாய் வந்தனுக்கிரம்**
**பதனமாய் வைத்து மனத்துள்ளே - நிதம்**
**பத்திசெய் வேறொன்றுமில்லை யில்லை - இது**
**பரம ரகசியம் என்று கொள்ளே” -**

என்று மாணிக்கவாசகர் விலாசம் என்னும் பழைய நூல் புகழ்கிறது.

**இத்தலச்சிறப்புகள்**

இத்தலம் வனம், தலம், புரம், தீர்த்தம், மூர்த்தி, தொண்டர் எனும் 6 சிறப்புக்கள் அமைந்தது 1) வனம் - குருந்தவனம் 2) தலம் - தீர்த்தத்தலம் 3) புரம் - சிவபுரம் 4) தீர்த்தம் - திருத்தமாம் பொய்கை 5) மூர்த்தி - ஆத்மநாதர் 6) தொண்டர் - மாணிக்கவாசகர்.

**வண்ண ஓவியங்கள்**

இடப்பால் சிவானந்த மாணிக்கவாசகர் சந்நிதி. வலமாகச் சுற்றி வரும்போது துவாரபாலகர்களையும் விநாயகரையும் தரிசிக்கிறோம். சுவரில் வண்ண ஓவியங்கள் மிகப்பழமையானவை. அழிந்த நிலையில் உள்ளன. அவற்றுள் ஒன்று. “அண்ட ரண்ட பட்சி” யின் வண்ண ஓவியம். இப்பறவை இரண்டு யானைகளை ஒருசேரத் தூக்குமளவுக்கு வலிமையுடைய பறவையுள்ள திகழ்ந்ததாகச் சொல்லப்படுகிறது. பாம்பன் சுவாமிகள் பாடியுள்ள வீரபத்திரச் சக்கரத்தின் வண்ண ஓவியம் உள்ளது. அட்டாங்க யோக வளர்ச்சிச் சிற்பங்கள் மேற்புறத்தில் உள்ளன. தூணில் கண்ணப்பர், கண்களை அப்பும் கோலம் முதலியைவகளையும் காணலாம். மண்டபத்தின் ஓரங்களில் அமைந்துள்ள கொடுங்கைகளின் அழகைக் கண்டு ஆனந்தம் பெறலாம்.

**ராஜகோபுரம்**

அடுத்துள்ளது ராஜகோபுரம் - முன்பு ஐந்து நிலைகளாக இருந்ததை மாற்றி எழுநிலைகளாக்கித் திருப்பணி செய்யப்பட்டுள்ளது. இதற்கான மகாகும்பாபிஷேகம் 27 -6- 1990 அன்று நடைபெற்றது நெடிதுயர்ந்த ராஜகோபுரம், தொலைவில் வரும்போதே வா என்று அழைக்கும் வான்கருணைச் சான்றான ஆத்மநாத ஸ்வரூபத்தின் ஸ்தூல அடையாளம். ராஜகோபுரத்தின் வழியே உட்செல்லும்போது வாயிலின் இடப்பக்கத்தில் - சுவரில் - வள்ளல் பச்சையப்பர் இக்கோயிலுக்கு வைத்துள்ள தர்மத்தைப் பற்றிய சாசனக் கல்வெட்டு, பதிக்கப்பட்டு உள்ளது.

**ஆறுசபைகள்**

இக்கோயிலில் கலாத்வா, தத்துவாத்வா, புவனாத்வா, வர்ணாத்வா, பதாத்வா, மந்திராத்வா முதலிய ஆறு ஆத்வாக்களைக் குறிக்கும் வகையில் ஆறுவாயில்கள் - ஆறு சபைகள் உள்ளன. அவை 1) கனகசபை 2) நடனசபை 3) தேவசபை 4) சத்சபை 5) சித்சபை

*6) ஆநந்த சபை என்றழைக்கப்படுகின்றன. (கனகசபை - 81 தீபங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. நர்த்தனசபை (நடன நிருத்தசபை) - பதஞ்சலி வியாக்ரபாதர்கள் பெருமானிடம் கருணையை வேண்டிப் பெற்ற இடம் 224 புவன தீபங்களையுடையது. சூரனிடம் பயந்த தேவர்கள் தவஞ்செய்த இடமாகச் சொல்லப்படுவது தேவ சபை - சுந்தரபாண்டிய மண்டபம் என்பர். இங்க ஏகாதச மந்திரங்கள் 11 தீபங்களாக உள்ளன. சத்சபையில் 36 எண்ணுடைய தத்துவத் தீபங்கள் பிரகாசிக்கின்றன. சித்சபையில் அகரமுதலான 51 எண்ணுடைய தீபம் திகழ்கிறது. ஆநந்தசபையில் (கருவறையில்) பஞ்சகலைகள் என்னும் சுடர், பிரகாசிக்கிறது. இவ்வாறு இத்திருக்கோயிலில் தத்துவம் அனைத்தும் தீபவடிவங்களாகவே வைத்துக் காட்டப்பட்டுள்ளன. இக்கருத்தை மனத்துக் கொண்டு உட்செல்வோம்)*

*1. இப்போது நாமிருப்பது பஞ்சாட்சர மண்டபம் - இதை கனகசபை என்பர். முந்நூறு ஆண்டுகட்கு முன் கட்டப்பட்டதாம். கொடுங்கைகளை அழகாகப் பெற்றுள்ள இம்மண்டபத்தின் மேற்புறச் சுவரில் எண்ணற்ற புவனங்களைக் குறிக்கும் அட்சரங்கள் செதுக்கப்பட்டுள்ளன. ஆத்மநாதர், தம்மை வழிபட்டு வந்த அந்தணர்களுக்கா, பூமியில் (கீழ்) நீர் வெட்டிக் காட்டிய திருவிளையாடலைக் குறிக்கும் சிற்பம் உள்ளது. பாண்டியன் விசாரிக்க, அமைச்சன் நிற்க, பக்கத்தில் கீழ்நிரை வெட்டிக் காட்டியவராக - குதிரைச் சாமியாராகக் காட்சி தரும் கோலத்தை இம்மண்டபத்தில் காணலாம். (இவ்வரலாறு இக்குறிப்பின் கடைசியில் தரப்பட்டுள்ளது.)*

*இவ்வரலாற்றுச் செய்தியைக் கவிக்குஞ்சர பாரதியார்,*

***"வனமான கைலைக்கு நிகரான சதுர்வேத***
***மங்களம் இருந்த லிங்கம்***
***கங்கை பங்காளராய் வேதியர்க் காகவே***
***காணி பறிகொண்ட லிங்கம்"***

*என்று பாடியுள்ளார்.*

*இதையே பின்வரும் திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணப் பாடலும் தெரிவிக்கின்றது.*

***"பொருந்துதில்லை வனம் கடந்துபோந்த வேந்தற்சேர்ந்தருளின்***
***வருந்த விடலந்தனிலிருந்த மறையோனாகி மறையோர்கட்***
***கிரங்கியருங் கீழ் நீர் காட்டி யிடங்கள் மீட்ட பெருமானே***
***குருந்த வரம்பிற் கரந்த மறைக் கொழுந்தே செழும் பொற்றாள் போற்றி."***

*இங்குள்ள தூண் ஒன்றில் இருதலைகளும் ஓருடலும் கொண்டு பின்னிய நிலையிலுள்ள பாம்பும், ஒன்றில் சாமுத்ரிகாலட்சணத்தைக் காட்டும் பெண் முதலான சிற்பங்களும் உள்ளன. இடப்பால் மாணிக்கவாசகர் மூலத்தானம். கிழக்கு நோக்கியது. இங்குள்ள தூண் ஒன்றில் நவக்கிரகங்கள் கல்லில் அடித்து வைக்கப் பட்டுள்ளன. தனியாக இக்கோயிலில் நவக்கிரக சந்நிதியில்லை. சந்நிதி மேற்புறத்தில் 27 நட்சத்திர வடிவங்களும் கல்லிற் செதுக்கப்பட்டுள்ளன. எதிரில் உள்ள தூண்களில் ஆதீனக் குருமூர்த்திகள், கட்டளைத் தம்பிரான்கள் காட்சி தருகின்றனர். சந்நிதியின் வெளிச்சுவரில் வண்ண ஓவியத்தில் ஸ்பரிச உபதேச, திருவடி தீட்சை ஓவியங்கள் உள்ளன. வலமாக வரும்போதுதிருவிளையாடற் புராண வரலாறுகளுள் பிறவும் வண்ணத்தில் இருப்பதைக் காணலாம்.*

*2. அடுத்தது நிருத்த மண்டபம் - நடனசபை, நர்த்தன சபை. இடப்பால் குறவன், குறத்தி சிலைகள். அற்புதமான கலையழகு, தலைக் கொண்டை முதல் ஒவ்வொரு உறுப்பையும், கை விரல் ரேகைகள் கூடத் தெளிவாக தெரியும் வண்ணம் செதுக்கியுள்ள கைவண்ணம் - வேடனின் நளினத்தோற்றம் - இவ்வாறே வலப்பால் காட்சிதரும் வேடன் வேடுவச்சி சிற்பங்கள் -அற்புதமான கலையழகு கருவூலங்கள். கண்களுக்குக் கொள்ளையழகு. சோமாசிமாற நாயனார் செய்த யாகத்திற்கு இறைவன் சென்ற வடிவம் இஃது தானே நினைத்தால் புல்லரிக்கும், மெய்சிலிர்க்கும். தலையழகுக் கோலங்கள் சங்கநிதி, பத்மநிதி சிற்பங்கள் - சற்று உள்ளே சென்றால் இடப்பால் வியாக்ரபாதரும் வலப்பால் பதஞ்சலியும் உள்ளனர். மற்றோர்*

இடத்தில் யாக்ஞவல்கியர் ஜனகர் உருவங்கள், நிருத்த மண்டபம் என்பதற்கேற்ப கல்விளக்குத் தூண் ஒன்றில் நிரூத்த (நடன) சிற்பங்கள் ஒன்றின் கீழ் ஒன்றாக உள்ளன.

3. வாயிலைக் கடந்து உட்புகுந்தால் அடுத்து வருவது தேவசபை - சுந்தர பாண்டிய மண்டபம் (சுந்தர பாண்டிய மன்னனால் புதுப்பிக்கப்பட்டதாதலின் இப்பெயர் பெற்றது) இடப்பால் பிரகாரத்தில் மாணிக்கவாசகர் உற்சவ மூர்த்தி சந்நிதி. இப்பெருமானைத் தரிசித்து விட்டுத்தான் உள்ளே மூலவரைத் தரிசிக்க செல்ல வேண்டும் என்பது இக்கோயில் மரபு. விநாயகர், வீரபத்திரர், பிட்சாடனர், ஊர்த்துவர் மூர்த்தங்களைத் தரிசித்தவாறே அம்பிகை சந்நிதியை அடைகிறோம். சுவாமியைப் போலவே அம்பாளும் தெற்கு நோக்கிய சந்நிதி, ஆத்மநாத சுவாமியைப் போலவே அம்பாளும் அருவம்தான். ஸ்ரீ யோகாம்பாள் சந்நிதியில் திருமேனி இல்லை. சததளபத்ம பீடத்தில் - 100 இதழ்கள் கொண்ட தாமரையாகிய பீடத்தில் - யோகாம்பாளின் திருவடிகள் மட்டுமே தங்கத்தாலான யந்திர வடிவமாக உள்ளன. முன்புறமுள்ள கல் ஜன்னல் வழியாகத்தான் தரிசிக்க வேண்டும். அதற்கேற்ப ஒளி பொருத்தப்பட்டுள்ளது. பூஜை செய்வோர் மட்டும் உள்ளே செல்வதற்குப் பக்கவாயில் உள்ளது. யோக சொரூபியைத் தரிசித்து விட்டு வலமாக வரும்போது சுவரில் உள்ள சிவபுராணத்தையும் திருவாசகப் பாடற்பகுதிகளையும் படித்தவாறே வலம் வரலாம்.

அடுத்த தரிசனம் தல விசேடக் காட்சியான குருந்தமர உபதேசக் காட்சி. கல்லில் வடித்துள்ள குருந்தமரம் - கீழே இறைவன் குரு வடிவில் அமர்ந்திருக்க எதிரில் மாணிக்கவாசகர் பவ்வியமாக இருந்து உபதேசம் பெறும் காட்சி வடிக்கப்பட்டுள்ளது. ஆனித் திருமஞ்சன நாளிலும் மார்கழித் திருவாதிரையிலும் மாணிக்கவாசகருக்கு உபதேசித்த காட்சி உற்சவம் நடைபெறுகிறது. அப்போது பூஜை செய்யும் நம்பியார் சிவ வேடமணிந்து, மாணிக்கவாசகரை எழுந்தருளச் செய்து உபதேச ஐதிகத்தை நடத்துவிக்கின்றார். "எந்தமராம் இவன் என்று என்னையும் ஆட்கொண்டருளும்" என்ற திருவாசகத்தை நினைவிருத்தித் தொழுது நகர்ந்தால், திருவாசகக் கோயிலைக் காணலாம். இங்குத் திருவாசக ஓலைச்சுவடியே இருப்பது விசேடம். நடராஜர் சந்நிதி மூலமூர்த்தமாக (கற்சிலையில்) அம்பலவாணர் - ஆனந்தக் காட்சி. பால சுப்பிரமணியரை வணங்கி மேற்பகுதியில் "நிலம் நீர் நெருப்பு" என்று தொடங்கும் திருவாசகத் தோணோக்கப் பாடல் எழுதப்பட்டு, அதற்குரிய உருவங்களும் உள்ளன.

4. அடுத்த சபை, சத்சபை, இங்குள்ள விசாலமான கல்மேடையில்தான் சுவாமிக்குக் கைபடாத அன்னம் நிவேதிக்கப்படுகிறது. இதனால் இதற்கு அமுத மண்டபம் என்றும் பெயர்.

5. சித்சபை அடுத்துள்ளது. பூசை செய்வோர் நிற்குமிடம். ஐந்து (பஞ்ச) கலைகள் தீபங்களாகக் காட்சி நல்குமிடம்.

6. ஆனந்த மயமான ஆத்மநாதரை நேரே காண்கிறோம். பரமசுவாமியான ஆத்மநாதர் எழுந்தருளியுள்ள கருவறையே - குருவருள் கொலு வீற்றிருக்கும் ஆநந்த சபை.

ஆவுடையார் - நம்மை ஆளுடையார். சதுரபீடம். மேலே சிவலிங்க பாணமில்லை. ஆத்மநாதசுவாமி அருவமாகக் காட்சியளிக்கிறார். அதற்குரீய இடத்தல் தங்கத்தாலான குவளை (ஆவுடையாரின் மேலே) சார்த்தி வைக்கப்பட்டுள்ளது. பின்னால் 27 நட்சத்திரங்களைக் கொண்டதான திருவாசி உள்ளது. அதன் மேலே மூன்று விளக்குகளை வைத்துள்ளனர். அவற்றுள் சிவப் அக்கினியையும், வெண்மை சூரியனையும், பச்சை சந்திரனையும் குறிக்கின்றதென்பர். சுவாமிக்கு முன்னால் இருதூங்கா விளக்குகள் சுடர் விடுகின்றன.

மண்ணிலே பிறந்து இறந்து மண்ணாவதற்கு ஒரப்படுகின்ற நம்மை, அண்ணல் ஆட்கொண்டு அடியாரிற்கூட்டிய 'அதிசயத்தை' அகம் நெகிழ நினைத்து, கண்ணீர் பெருக்கி, கையாரத் தொழுது, வாய்குளிரப் பாடி, "சடையவனே தளர்ந்தேன் எம்பிரான் என்னைத் தாங்கிக்

கொள்ளே" என்று பிராத்திக்கின்றோம். சேர்ந்தறியாக் கையானிடம் கைகளைச் சேர்த்துக் குவித்து, நெஞ்சிற்குடி கொண்ட நீலமேனியைத் தியானிக்கின்றோம்.

**"சீரார் பெருந்துறை நம் தேவனடி போற்றி**
**ஆராத இன்பம் அருளுமலை போற்றி"**

பிரிய மனமின்றித் தரிசித்தவாறே வெளியே வந்து பக்கத்தில் சென்றால் தியாகராஜா மண்டபத்தை அடையலாம். வழியில் வெயிலுகந்த விநாயகர் வீற்றிருக்கின்றார். பக்கத்தில் அக் கினிதீர்த்தம் "இதற்குத் திருத்தமாம் பொய்கை" என்று பெயர். தியாகராஜ மண்டபத்தில் மகாலிங்கமூர்த்தி தரிசனம் தருகரிறர். எதிரில் முத்து விநாயகர் மண்டபத்தின் மேற்கூறையில் தொங்கும் கற்சங்கிலிகள் கண்களைக் கவர்கின்றன. கொடுங்கைகளின் அற்புதத்தை இம்மண்டபத்தில் காணலாம். எவ்வுளவு கனமான கருங்கல்லை எந்த அளவுக்கு மெல்லியதாக இழைத்து, எத்தனை எத்தனை மடிப்புக்களாகக் கொண்டு வந்துள்ளார்கள் என்பதைக் கண்டு வியப்படைவதற்காக இடப்பக்கத்தின் கோடியில் இரண்டு மூன்றிடங்களில் துளையிட்டுக் காட்டியுள்ளார்கள்.

**தீர்த்தங்கள்**

இத்திருக்கோயில் பல்வகையிலும் சிறப்புக்களைப் பெற்றுத் திகழ்கிறது. இங்குத் தனியே தட்சிணாமூர்த்தி சந்நிதியில்லை. இத்தலத்தில் 24 தீர்த்தங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவை அக்கினி தீர்த்தம், ஆத்ம கூபம், வேததீர்த்தம், நாராயண தீர்த்தம், தேவதீர்த்தம், வாயுதீர்த்தம், மானவதீர்த்தம், காலாக்னிருத்ர தீர்த்தம், முளு தீர்த்தம், ஆசுர தீர்த்தம் காந்தர்வ தீர்த்தம், இந்திர தீர்த்தம், பராசர தீர்த்தம், சூரிய தீர்த்தம், சந்திர வாவி, வைதிக தீர்த்தம், லட்சுமி தீர்த்தம், சரஸ்வதி கூபம், பக்த தீர்த்தம், பாண்டவ தீர்த்தம், கௌதம தீர்த்தம், தொண்டர் குழி, கீழ் நீர், சுவேதநதி என்னும் வெள்ளாறு என்பன. இதனால் சுவாமிக்குத் தீர்த்த நாதர் என்ற பெயருமுண்டு.

மூலவருக்கு மகுடாகமம் உத்தரபாகத்தின்படி பூஜைகள் நடைபெறுகின்றன. ஆனி மகத்திலும் மார்கழித் திருவாதிரையிலும் 10 நாள்கள் பெருவிழா நடைபெறுகிறது. இத்தலத்தில் "நம்பியார்கள்" எனப்படுபவர்களே முக்கிய பூஜகர்களாவார்கள். இவர்கள் ஆத்ம நாதசு வாமியை உள்ளிட்ட 301 பேர்களாவர்.

**பூஜைகள்**

இத்திருக்கோயிலில் ஆறு வகைப்பட்ட பிரவினர்களின் மூலமாகப் பூஜைகள் நடைபெறுகின்றன.

1. மூலவருக்கும், குரந்தமரத்தடியிலுள்ள மூல சுவாமிக்கும் - நம்பியார்களும்
2. பரிவார தெய்வங்களுக்குச் சிவாசாரியார்களும்
3. குதிரைச்சாமிக்குச் சைவப் பிள்ளைமார்களும்
4. வீரபத்திரருக்கு வேளாளர்களும்,
5. கொத்தனார்களும் மகாலிங்கமூர்த்திக்கு அஷ்ட சாஸ்திரக்காரர்கள் எனப்படுவோரும் பூஜைகளைச் செய்து வரும் ஏற்பாடு இங்குள்ளது.
6. நாள்தோறும் ஆறுகால பூஜைகள்.

ஆத்நாதருக்கு ஆறுகாலங்களிலும் புழுங்கலரிசி நிவேதனம், ஒரு தவலையில் வடித்து, கை படாமல் அப்பாத்திரத்தோடு கொண்டுவந்து அமுத மண்டபத்தில் உள்ள கருங்கல் மேடையில் (சுவாமிக்கு எதிரில்) அப்படியே கொட்டி, ஆவியோடு சுவாமிக்கு நிவேதிப்பதை நாமும் பார்த்துத் தரிசிக்கலாம். அர்த்த சாமத்தில் தினமும் புளியோதரை, எள் சாதம், பால் சாதம், உளுந்து சாதம், பாகற்காய், முளைக்கீரை நிவேதனம். திருவிழாக்காலங்களில் வழக்கமான நிவேதனங்களுடன் தேன்குழல், வடை, புட்டு சீயம், அதிரசம், தோசை முதலியவை சிறப்பு நிவேதனமாகும். இந்த நிவேதன அமைப்பு ஆனி மகத்திலும் மார்கழித் திருவாதிரையிலும் நடைபெறும் உற்சவ காலங்களில் மாணிக்கவாசகருக்கும் உண்டு.

**மாணிக்கவாசகரின் பக்திச்சுவை**

திருப்பெருந்துறை ஆவுடையார்கோயில் குறித்து மாணிக்கவாசகர் அருளிய திருவாசகப் பகுதியாகும். இது பூவேறு கோனும் புரந்தரனும் எனத் தொடங்கும் கொச்சகக் கலிப்பா-அதாவது, உள்ளம் உருகி, அனுபவமாக இறைவன் அருளைச் சொல்கின்ற பக்திப் பாடல்.

**பாடலின் மையக் கருத்து**

என்னை நான் என்று நினைத்திருந்த அகந்தையை உருக்கி, பிறப்பு-இறப்பு என்னும் சங்கிலியை அறுத்து, தன் கருணையால் என்னை ஆட்கொண்ட சிவபெருமானின் அருள் அனுபவம்

**பக்திச்சுவை**

என் மனம் இரும்புபோல் கடினமாக இருந்தது. அதை நீ ஈர்த்து உருக்கி, கரும்பைப் போல இனிமையான உன் திருவடியின் சுவையை எனக்குக் காட்டினாய். நரிகளைப் பெரிய குதிரைகளாக்கியதுபோல், என் தாழ்ந்த நிலையை உயர்த்தியது. இனிய மொழி பேசும் பார்வதியின் பாதி கொண்டவனே! உன்னை அடைந்தவர்களுக்கு நீ அமுதமாகிறாய். என் மண்ணோடு சேர்ந்த பிறப்பை அறுத்து, வா என்று அழைத்தது- உன் திருவடியைக் கண்ட அந்தக் கணமே. பிறப்பு-இறப்பு எனும் கொடிய நரகத்தில் தனியாகச் சிக்கிய நான், ஆ! ஆ! என்று அழுதபோது, நஞ்சை உண்டு உலகைக் காத்தவனே- உன் திருவடியை எனக்குக் காட்டினாய். பாம்பை அணிந்தவனே, சடையுடையவனே, சிறு தெய்வங்களை நாடாதபடி என்னை காத்து, உன் திருவடிகளை நினைக்கச் செய்தாய்- அதுவே என் உள்ளத்தின் உயர்வு. எனக்கு கல்வி ஞானமும் இல்லை, உருகும் தவமும் இல்லை; ஆனால் வேறு தெய்வம் எனக்குத் தெரியாது.உன் திருவடி வந்து என்னை ஆட்கொண்டது- அதுவே உன் பொன்னருள்.

மேலும் பெண்களின் பார்வையாலும், உலக இன்பத்தாலும் துன்புற்ற நான், உன் அருளால் மீண்டேன்.அஞ்சாதே என்று என்னை ஆண்டது-அம்பலத்து அமுதமான உன் கருணை. என் பிறப்பை அறுத்த சிவபெருமான், தேவன்களாலும் அறிய முடியாதவனாய், அன்பால் என் உள்ளத்தில் புகுந்து, என்னை நோக்கி அருள் செய்தான். முதலுமாய், முடிவில்லாதவனாய், உண்மையும் இன்மையும் ஆனவனே, என்னை இவ்வுலகில் அலைக்கழிந்த போதும் கருணையால் முழுமையாக ஆட்கொண்டாய். திருவடி மலர் மனத்தில் மலர, தெருவுதோறும் சிவபெருமான் என்று அழைத்து, உன் பேரருள் எனக்கு கடல்போல் பருகியது- இடைமருதில் உறையும் இறைவனே! நான் தவம் செய்தேனா? சிவாய நம என்ற நாமத்தைப் பெற்றேன்! அமுதமாய் இனித்த சிவபெருமான் என் உள்ளத்தில் வந்து புகுந்து, இந்த உடல் வாழ்க்கையையே எனக்கு வெறுக்கச் செய்தான் என மாணிக்கவாசகர் தன் மனம் உருகி பாடிய பாடல்களின் வழி அறிய முடிகிறது.

**முடிவுரை**

ஆவுடையார் கோவிலில் உள்ள ஆத்மநாத சுவாமி கோயில் மற்ற கோயில்களில் காணப்படாத பல சிறப்பு அம்சங்களைப் பெற்றிருக்கிறது. இது போன்ற பல தனிச் சிறப்புகளை கொண்டு தமிழகத்தின் கோயிற் பண்பாட்டின் சின்னமாக ஆவுடையார் கோவில் விளங்குகிறது. மேலும் மாணிக்கவாசகரின் பக்திச்சுவையும் வெளிப்படுகிறது.

**துணை நூல் பட்டியல்**

1. "திருப்பெருந்துறை என்னும் ஆவுடையார் கோவில்". Archived from the original on 2018&08&20. Retrieved 2018&11&28.
2. "காப்பகப்படுத்தப்பட்ட நகல்". Archived from the original on 2014&02&20. Retrieved 2013&01&09.
3. http://pudukkottai.nic.in/taluks&avkoil.htm
4. "காப்பகப்படுத்தப்பட்ட நகல்". Archived from the original on 2012&08&21. Retrieved 2013&01&09.
5. http://pudukkottai.nic.in/blocks&avkoil.htm
6. வீ. ஜெயபால், சைவ நால்வரால் பாடல் பெற்ற திருத்தலங்கள், திருவாசகத் தலங்கள்,

*சைவ சித்தாந்த ஆய்வு மையயம், 28, அம்மையப்பா இல்லம், சீனிவாசபுரம் விரிவாக்கம், தஞ்சாவூர் 613 009, டிசம்பர் 2014, ப.10*

7. திருப்பெருந்துறை
8. http://dinamani.com/editionmadurai/article1255627.ece
9. http://www.tamilvu.org/slet/l4180/l4180uri.jsp?songno=-26bookid=116headid=66subid=2311
10. *திருவாசக விளக்கம் - ஆசிரியர்: ரா.ப. சேதுப்பிள்ளை - உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் - 2008*
11. *நூல் பெயர்: மாணிக்கவாசகர் விலாசம் - நூல் வகை: சைவப் புராண விலாச நூல் (மாணிக்கவாசகரின் வரலாறும் மகிமையும்*
12. *பாரதியாரின் படைப்புக்களை காலவரிசைப் படுத்திய தொகுப்பு (23 தொகுதிகள்), இந்தியா (2024 வெளியீடு).*
13. *திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் (திருப்பெருந்துறை ஆதீன பாடல் தொகுப்பு* / Temple Oral/Purana Song) kamakoti.org